


ஆன்மிக சிகரத்தின்

# நம்ம ஊரு நியூஸ்

RNI No: TNTAM/2017/75122




Editor: V.S.N.Sharma | Chief Reporter : S.Esakki | Chennai : 9710755689 | 9962505384 | 6 பக்கம் | 3.3.2026 செவ்வாய்க்கிழமை ★★



பேரூர் செட்டிபாளையம் ஊராட்சி பச்சாபாளையம், வி.எஸ்.வி நகரில் ரூ.6.55 லட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைப்பதற்காக பூமிபூஜை பணிகளை எம்.எல்.ஏ தாமோதரன் தொடங்கி வைத்தபோது எடுத்த படம். அருகில் முன்னாள் எம்.எல்.ஏ., எட்டிமடை சண்முகம் மற்றும் பலர் உள்ளனர்

## கிணத்துக்கடவு தொகுதியில் ரூ.35 லட்சத்தில் வளர்ச்சிப் பணிகளுக்கான பூமிபூஜையை

# தாமோதரன் எம்.எல்.ஏ. துவங்கி வைத்தார்

கோவை, மார்ச். 3: கிணத்துக்கடவு தொகுதியில், ரூ. 35 லட்சம் மதிப்பீட்டிலான வளர்ச்சிப் பணிகளை, எம்.எல்.ஏ., தாமோதரன் பூமி பூஜை செய்து நேற்று துவக்கி வைத்தார்.கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட பேரூர் செட்டிபாளையம் ஊராட்சியில் வி.எஸ்.வி நகரில் 6 லட்சத்தில் கான்கிரீட் ரோடு அமைக்கவும், தீத்திபாளையம் ஊராட்சியில், காளம்பாளையத்தில் ரூ. 7 லட்சத்தில் பஸ் ஸ்டாப் அமைக்கவும், முத்து நகரில், ரூ. 8 லட்சத்தில் கான்கிரீட் ரோடு அமைக்கவும், மாதம்பட்டி ஊராட்சியில், செல்லப்பகவுண்டன் புதூரில், ரூ. 6:50 லட்சத்தில் சாக்கடை வடிகால் அமைக்கவும், மாதம்பட்டியில், ரூ. 7 லட்சத்தில் பஸ் ஸ்டாப் அமைப்பது உள்பட, மொத்தம் ரூ. 35 லட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக, எம்.எல்.ஏ தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதையடுத்து, பேரூர் செட்டிபாளையம் ஊராட்சி, பச்சாபாளையம் வி.எஸ்.வி நகரில் கான்கிரீட் சாலை அமைப்பதற்காக பூமி பூஜை நேற்று நடந்தது. இதில்,மாவட்ட ஜெயலலிதா பேரவை துணைச் செயலாளர் வி. பிரசாத் வரவேற்றார்; முன்னாள் எம்.எல்.ஏ எட்டிமடை சண்முகம், மாவட்ட விவசாய அணி செயலாளர் மகாலிங்கம், முன்னிலை வகித்தனர்.

இதில், கிணத்துக்கடவு தொகுதி எம்.எல்.ஏ தாமோதரன் கலந்து கொண்டு, தொகுதிக்குட்பட்ட பேரூர் செட்டிபாளையம், தீத்திபாளையம், மாதம்பட்டி ஊராட்சிகளில் மொத்தம் ரூ.35லட்சம்மதிப்பீட்டிலான வளர்ச்சி பணிகளை பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார். இதில், முன்னாள் வார்டு உறுப்பினர்கள் ஜி.பி. பாபு, நந்தகோபால், பச்சாபாளையம் கிளை செயலாளர் ரமேஷ், கார்த்திகேயன், கிளைச் செயலாளர் முருகேஷ், வரதராஜ், மனோஜ், தங்கதுரை, மார்க்கண்டன் மற்றும் வி.எஸ்.வி நகர் குடியிருப்பு மக்கள் கலந்து கொண்டனர்.

## தொண்டாமுத்தூர் தொகுதியில் போட்டியிட மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி விருப்பமனு



தொண்டாமுத்தூர் தொகுதியில் தி.மு.க., சார்பில் போட்டியிட, சென்னை அண்ணா அறிவாலயத்தில் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி விருப்ப மனு தாக்கல் செய்தார். அருகில், பேரூர் பேரூராட்சி தலைவர் அண்ணாதுரை, சிஆர் ரவிச்சந்திரன், ஞானமணி சிவகுமார், விளையாட்டு அணி கோபி மற்றும் பலர் உள்ளனர்.



தொண்டாமுத்தூர் தொகுதியில் உள்ள மூத்த முன்னோடிகளின் சந்திப்பு நிகழ்வின்போது கழக சுற்றுச்சூழல் அணியின் மாநில செயலாளரும் தமிழர் நல வாரிய தலைவருமான கார்த்திகேய சிவசேனாதிபதி, தென்கரை பேரூராட்சியின் முன்னாள் தலைவர் ராஜாமணி நடராஜ் அவர்களின் இல்லத்துக்கு வந்த போது, தாளியூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவர் டி.எஸ்.புனிதன் சாலை அணிவித்து வரவேற்றபோது எடுத்த படம். அருகில் மாநில சுற்றுச்சூழல் அணியின் மாநில துணைச் செயலாளர் மணி சுந்தர் உள்ளார்.

## கோவையில் மாவட்ட அளவிலான இறகுபந்து போட்டியில் ஆர்வமுடன் பெண்கள் பங்கேற்பு



கோவை, மார்ச். 3: பெண் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி பெண்கள் ஒருங்கிணைத்த இறகு பந்து போட்டியில் மாவட்ட அளவில் பல்வேறு துறைகளை சார்ந்த பெண்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

கோவையில் பெண்கள் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் "Her Voice For Her Education" என்ற தலைப்பில் மாவட்ட அளவிலான இறகுப்பந்து போட்டி நடைபெற்றது.

சங்கனூர் பகுதியில் நடைபெற்ற இந்த போட்டியில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

பெண்கள் இரட்டையர், கலப்பு இரட்டையர் மற்றும் ஆண்கள் இரட்டையர் என மூன்று பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள்மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன.

பெண்களின் கல்வி உரிமையை வலுப்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த முயற்சி, விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.



பச்சாபாளையத்தில் அ.தி.மு.க., சார்பில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை, மாவட்ட ஜெ., பேரவை துணைச் செயலாளர் வி. பிரசாத் வழங்கிய போது எடுத்த படம். அருகில், முன்னாள் ஊராட்சி செயலாளர் ஜி.பி.பாபு, வார்டு செயலாளர் மயில்சாமி, பூத்செயலாளர் விக்னேஸ்வரன் மற்றும் பலர் உள்ளனர்.

# பச்சாபாளையத்தில் அ.தி.மு.க., சார்பில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

கோவை, மார்ச். 3: அ.தி.மு.க., சார்பில், பேரூர் செட்டிபாளையம் ஊராட்சி, பச்சாபாளையத்தில், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி கள் வழங்கப்பட்டது. பச்சாபாளையம் அருகே 6வது வார்டுக்கு உட்பட்ட மாரியம்மன் கோவில் வீதியில் உள்ள பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. விழாவுக்கு, 6வது வார்டு கிளை செயலாளர் மயில்சாமி வரவேற் றார். முன்னாள் ஊராட்சி செயலாளர் ஜி.பி பாபு முன்னிலை வகித்தார். இதில் மாவட்ட ஜெ., பேரவை துணைச் செயலாளர் வி. பிரசாத் கலந்துகொண்டு பேசும்போது; தி.மு.க ஆட்சியில் மக்கள் பெரும் வேதனைக்கு ஆளாகியுள்ளனர். வரும் தேர்த லில் திமுகவை வீட்டுக்கு அனுப்ப மக்கள் தயாராகி விட்டனர். ஆனால், அதிமுக ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது. தொடர்ந்து கோவை மாவட்டத்தின் வளர்ச்சிக்கும், தொகுதியிலும் மக்கள் நலத் திட்டப் பணிகளை தங்கு தடையின்றி நிறைவேற்றிட அதிமுகவுக்கு வாக்களிக்க வேண் டும் என்றார். இதைத்தொடர்ந்து, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில், பூத் செயலாளர் விக்னேஷ்வரன், 6வது வார்டு செயலாளர் என். மாரிமுத்து, பிரதீப், வேல்முருகன், செந்தில், வெள்ளிங்கிரி உள்பட ஏராளமான கட்சியினரும், 6வது வார்டைச்சேர்ந்த பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



பச்சாபாளையத்தில் கிரிக்கெட் வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை, எம்.எல்.ஏ., தாமோதரன் வழங்கிய போது எடுத்த படம்.

# பச்சாபாளையத்தில் கிரிக்கெட் வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்!

## எம்.எல்.ஏ தாமோதரன் வழங்கினார்!

கோவை, மார்ச். 3 : பச்சாபாளையத்தில் கிரிக்கெட் வீரர்களுக்கு, விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது. பேரூர் செட்டிபாளையம் ஊராட்சிக்குட்பட்ட பச்சாபாளையத்தில், கிரிக்கெட் வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா நடந்தது. இதில், எம்.எல்.ஏ., தாமோதரன் கலந்து கொண்டு, கிரிக்கெட் வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், முன்னாள் எம் எல் ஏ எட்டிமடை சண்முகம், தெற்கு மாவட்ட விவசாய அணி செயலாளர் மகாலிங்கம், மாவட்ட ஜெ., பேரவை இணைச் செயலாளர் வி. பிரசாத், முன்னாள் ஊராட்சி செயலாளர் ஜி.பி. பாபு, பச்சாபாளையம் கிளைச் செயலாளர்கள் நந்தகோபால், ரமேஷ் மற்றும் கார்த்திகேயன் மார்க்கண்டன், சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் மார்ச் 23-ல் தீர்ப்பு

மதுரை, மார்ச். 3: சாத் தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கின் விசா ரணை முடிந்த நிலை யில், மார்ச் 23-ல் தீர்ப்பளிக்கப் படும் என விசாரணை நீதி மன்ற நீதிபதி அறிவித் துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந் தவர் ஜெயராஜ், இவரது மகன் பென்னிக்ஸ். இவர் கள் செல்போன் கடை நடத்தி வந்தனர். கடந்த 2020 ஜூன் 19-ல் கரோனா ஊரடங்கு நேரக் கட்டுப் பாடு தாண்டி கடையை திறந்து வைதிருந்ததாக கூறி ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும் போலீஸார் விசாரணைக்காக சாத் தான்குளம் காவல் நிலை யம் அழைத்துச் சென்றனர்.

காவல் நிலையத்தில் வைத்து தந்தை, மகன் இருவரையும் போலீஸார் கடுமையாக தாக்கியுள் ளனர். பலத்த காயமடைந்த நிலையில் முதலில் பெனிக்ஸ், பின்னர் ஜெயராஜ் ஆகியோர் உயிரிழந்தனர்.

தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற் படுத்திய தந்தை, மகன் கொலை வழக்கை உயர் நீதி மன்ற மதுரை அமர்வு சிபிஐ விசாரணைக்கு மாற்றியது.

இதையடுத்து சிபிஐ போலீஸார் கொலை வழக்குப் பதிவு செய்து சாத் தான்குளம் காவல் ஆய்வா ளர் ஸ்ரீதர், உதவி ஆய்வா ளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமை காவ லர்கள் முருகன், காவலர்கள் முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து உள்ளிட்ட 9 பேரை கைது செய்து மதுரை மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் கடந்த 5 ஆண்டுகளாக விசாரணையில் உள்ளது. சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து விசாரணை தீவிரமாக நடைபெற்று வந்தது. கைதான 9 பேரும் ஜாமீன் கோரி விசாரணை நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி யானது. கைதான நாளிலி ருந்து 9 பேரும் சிறையில் உள்ளனர்.

இந்த வழக்கின் விசார ணையை 6 மாதத்தில் முடிக்க உயர் நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டது. அந்த கால அவகாசம் முடிந்த நிலையில் மேலும் 6 மாதம் அவகாசம் கேட்டு விசாரணை நீதிமன்றம் தரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உயர் நீதிமன்றம் 3 மாத அவகாசம் வழங்கி கடந்தாண்டு நவம்பர் 26-ல் உத்தரவிட்டது.

இதையடுத்து, விசாரணை நீதிமன்றத்தில் விசாரணை சூடுபிடித்தது. தினமும் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதுவரை அரசு தரப்பில் 52 சாட்சிகள், குற்றச்சாட்டப்பட்ட வர்கள் தரப்பில் 7 சாட்சிகள் விசா ரிக்கப்பட்டுள்ளனர். 271 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. லத்தி உள்ளிட்ட 57 சாட்சியப் பொருட்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.விசா ரணை முடிந்த நிலையில் மார்ச் 23-ல் தீர்ப்பு அளிக்கப் படும் என மதுரை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி முத்துக்குமரன் அறி வித்தார்.

## 1,984 புதிய குடியிருப்புகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அடிக்கல்

# 5,367 அடுக்குமாடி குடியிருப்புகள் திறப்பு

சென்னை, மார்ச். 3 : நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ரூ.840.76 கோடியில் கட்டப்பட்ட 5,367 அடுக்குமாடி குடியிருப்புகளை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

ரூ.420.34 கோடியில் 1,984 புதிய குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் மறு கட்டுமானத்திட்டத்தின் கீழ், தேனாம்பேட்டையில் நடந்த விழாவில், டாக்டர் தாமஸ் சாலை, சுபேதார் கார்டன், அப்பாசாமி முதலி தெரு, பெரியபாளையத்தம் மன் கோயில் ஆகிய திட்டப்பகுதி களில் ரூ.153.69 கோடியில் கட்டப்பட்ட 870 குடியிருப்பு களைத் திறந்துவைத்தார்.

கிரீம்ஸ் சாலையில் உள்ள குடிசைகளை அகற்றி, அப்பகுதி மக்களுக்கு வீடுகள் வழங்க ரூ.46.12 கோடியில், 283 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். மயிலாப்பூ ரில் நடந்த விழாவில், குயில் தோட்டம், வன்னியபுரம் திட்டப் பகுதிகளில் ரூ.101.94 கோடியில் கட்டப்பட்ட 600 அடுக்குமாடி குடியிருப்புகளைத் திறந்து வைத்தார். கோட்டூர்புரத்தில் நடந்த விழாவில் கோட்டூர்புரம், அப்பாவு நகர், சுப்புபிள்ளை தோட்டம், ராயபுரம் தொகுதியில் செட்டித் தோட்டம், கோயம்புத் தூர் மாவட்டம் அவிநாசி தொகுதி யில் முல்லை நகர் திட்டப்பகுதி, வால் பாறை தொகுதியில் வால்பாறை, மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியில் கரடிக்கல், திருச்சி கிழக்கு தொகுதியில் ஜெயில் பேட்டை பகுதி-2 ஆகிய திட்டப் பகுதிகளில் ரூ.585.13 கோடியில், 3,897 குடியி ருப்புகளைத் திறந்து வைத்தார்.




இந்த நிகழ்வுகளில், பயனாளி களுக்கு குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகளையும் முதல்வர் வழங் கினார். சோழிங்கநல்லூர் தொகுதி பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் ரூ.4 கோடி மதிப்பில் கட்டப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் கொண்ட விளையாட்டு மைதா னத்தை திறந்துவைத்து, சிட்கோ நகர் திட்டப்பகுதியில் ரூ.374.22 கோடியில் 1,701 புதிய அடுக்கு மாடிக் குடியிருப்புகள், பெரும்பாக் கம் திட்டப்பகுதியில் ரூ.5 கோடி யில் முதல்வர் படைப்பகம் கட்ட அடிக்கல் நாட்டினார். குடியிருப்பு வளாகத்தில் மரக்கன்று நட்டு வைத்து, அங்கு செய்து தரப்பட் டுள்ள வசதிகள் குறித்து பயனாளி களிடம் கேட்டறிந்தார்.

இந்த திட்டப் பகுதிகளில், கூடைப்பந்து மைதானம், திறந்த வெளி அரங்கம், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், கைப்பந்து மைதானம், 200 மீட்டர் தடகளப் பாதை, கபடி மைதானம், கோ கோ மைதானம், பொதுமக்கள் அமர்ந்து கண்டு களிக்கும் வகை யில் 250 இருக்கைகள் கொண்ட காட்சிக்கூடம், சிறுவர் பூங்கா, அங்கன்வாடி போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், துணை முதல் வர் உதயநிதி ஸ்டாலின், அமைச் சர்கள் தா.மோ.அன்பரசன், மா. சுப்பிரமணியன், சேகர்பாபு, சென்னை மேயர் பிரியா, மாநக ராட்சி ஆணையர் குமரகுருபரன், வீட்டுவசதித் துறை செயலர் காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண் இயக்குநர் ஸ்ரேயா பி.சிங், இணை மேலாண் இயக்குநர் ந.பிரியா ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மாசி திருவிழா சிகர நிகழ்ச்சியான தேரோட்டத்தை முன்னிட்டு குலசேகரன்பட்டினம் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் சிவந்தி தலைமையில் நூலக ஆர்வலர் அமிரலிங்கம் முன்னிலையில் தஞ்சாவூர் தொழிலதிபர் நடராஜன் 2500 பக்தர்களுக்கு மோர் வழங்கி சிறப்பு செய்தார்கள். இந்த நிகழ்வில் நாக ரகோத்மன் உடன்குடி ஒன்றிய கிழக்கு திமுக இளைஞரணி அமைப்பாளர் மனோஜ் மெஞ்ஞானபுரம் முத்துக்குமார், பரமன்குறிச்சி குமார் மற்றும் மாணவர் இயக்கம் சிவனேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை குலசேகரன்பட்டினம் நூலகத்தின் நல் நூலகர் நூலகச் செம்மல் மாதவன் செய்திருந்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவோடு அமையவிருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட விருப்ப மனுவைச் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வழங்கியபோது எடுத்தபடம்.



## பெரம்பலூர் கலெக்டர் ந.மிருணாளினி தலைமையில்

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

பெரம்பலூர், மார்ச். 3: பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர் ந.மிருணாளினி தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் இருக்கும் இடத்திற்கே சென்று கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்கள், கடந்த வாரங்களில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பொது மக்களிடமிருந்து பெறப் பட்ட மனுக்களுக்கு எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் குறித்தும், ஒரு மாதத்திற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்படாத மனுக்களின் விவரங்களையும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.



தொடர்ந்து, முதியோர் உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை, தொழில் தொடங்க கடன் உதவி, வீட்டு மனைப் பட்டா, விதவை உதவித் தொகை, ஆதரவற்றவற்றோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், கல்விக் கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், கலைஞர் மகளிர் உரிமை தொகைத் திட்டம், கலைஞர் கனவு இல்லம் திட்டம், அடிப்படை வசதிகள் கோருதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 435 மனுக்களை பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட அலுவலர்கள் பெற்றுக் கொண்டனர்.

அதனை தொடர்ந்து, தொழிலாளர் நல அலுவலகம் (சமூக பாதுகாப்புத் திட்டம்) சார்பில் திருமண உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை, இயற்கை மரண உதவித் தொகை, இலவச வீடுகட்டுவதற்கு ஆணை என 7 பயனாளிகளுக்கு ரூ.13,40,000 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க. கண்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சக்திவேல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வாசுதேவன், சமூக பாதுகாப்பு திட்ட தனித் துணை ஆட்சியர் சிவக் கொழுந்து, தாட்கோ பொது மேலாளர் கவியரசு, தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் திரு.பாஸ்கரன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சுய உதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் பகுதி அளவிலான

# கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருது

பெரம்பலூர், மார்ச். 3: பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 2024-25 ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்பட்ட சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகைளை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி வழங்கினார்.



பெரம்பலூர் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சிறந்த முறையில் குழு கூட்டங்கள், நிர்வாக சுழற்சி முறை மற்றும் நிதி வரவு, செலவு மேற்கொள்ளும் தொழில் , தரம் மற்றும் தணிக்கை, வங்கி கடன், அடிப்படை பயிற்சி மற்றும் தொழில் பயிற்சி, விழிப்புணர்வு விவரங்கள், சமுதாய மேம்பாட்டு பணியில் ஈடுபட்ட விபரம், கிராம சபை பங்கேற்பு, மாற்று திறனாளி மற்றும் முதியோர் மேம்பாட்டில் பங்கு ஆகியவற்றில் சிறப்பாக செயல்படும் கிராமப்புற / நகர்புற பகுதிகளிலுள்ள சுய உதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளை மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப் பட்டது.

அதனடிப்படையில் சிறப்பாக செயல்பட்ட, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், டி.களத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ.1,00,000, பெரம்பலூர் (நகர்ப்புறம்) பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ.1,00,000, ஊரகம் பகுதியில் வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், கீழப்புலியூர் ஊராட்சி சாமந்தி பூ மகளிர் சுய உதவிக்குழு, பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், அம்மாபாளையம் களஞ்சியம் மகளிர் சுய உதவிக்குழு, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஜெமீன் பேரையூர் கங்கை மகளிர் சுய உதவிக்குழு மற்றும் நகர்புற பகுதியில் பெரம்பலூர் நகராட்சி பகுதியில் உள்ள விண்மீன் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் குரும்பலூர் பேரூராட்சியில் உள்ள பாளையம் காமராஜர் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய 5 குழுக்களுக்கு தலா ரூ.25,000/- வீதம் ரூ.1,25,000 என மொத்தம் ரூ.3,25,000 பரிசுத் தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் கோபலகிருஷ்ணன், உதவித்திட்ட அலுவலர் பெர்லினா, வட்டார பணியாளர்கள் , சமுதாய அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டர்.

## பிளஸ் 2 தமிழ் மொழிப் பாடத் தேர்வு எளிது:

# அதிக மதிப்பெண் கிடைக்கும் என ஆசிரியர்கள் கருத்து

சென்னை, மார்ச். 3: தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் பிளஸ் 2 வகுப்புக்கான பொதுத் தேர்வு நேற்று தொடங்கியது. முதல் நாளில் தமிழ் உள்ளிட்ட மொழிப் பாடங்களுக்கான தேர்வுகள் நடைபெற்றன. இத் தேர்வை தமிழகம் முழுவதும் உள்ள 3,412 மையங்களில் 8 லட்சத்து 6,370 மாணவர்கள் எழுதினர். 1,600 தனித் தேர்வர்கள் உட்பட 9,919 பேர் தேர்வு எழுத வரவில்லை.

தேர்வு காலை 10.15 மணிக்கு தொடங்கி மதியம் 1.15 மணி வரை நடைபெற்றது. சென்னை தியாகராய நகரில் உள்ள குண்டூர் சுப்பையா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பொதுத் தேர்வுக்கான ஏற்பாடுகளை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் ஆய்வு செய்தார். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், “பொதுத் தேர்வு எழுதும் மாணவர்கள் சரியாக தூங்காமல், சரியாக சாப்பிடாமல் உடல்நலனை கெடுத்துக் கொள்ளக் கூடாது. நன்கு படித்துவிட்டு, போதிய அளவு உறங்கிவிட்டு தேர்வுகளை எழுத வேண்டும்.

பெற்றோரும் மாணவர்களுக்கு அழுத்தத்தை கொடுக்க வேண்டாம். விருதுநகர் மாவட்டத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வுக்கு சென்ற மாணவி விபத்தில் சிக்கி உயிரிழந்த செய்தி வருத்தமளிக்கிறது. இயன்றவரை, அருகில் உள்ள தேர்வு மையங்கள்தான் மாணவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. எனினும், எதிர்பாராதவிதமாக இதுபோன்ற அசம்பாவிதங்கள் நிகழ்கின்றன. இதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்’’ என்று தெரிவித்தார்.

இதற்கிடையே, பிளஸ் 2 தமிழ் தேர்வு எளிதாக இருந்ததாக மாணவர்கள் தரப்பில் கூறப்பட்டது. இதுகுறித்து தமிழ் ஆசிரியர்களிடம் கேட்டபோது, “ஒரு மதிப்பெண் பகுதியில் மொத்தம் உள்ள 14 கேள்விகளில் 3 மட்டும் சற்று கடினமாக இருந்தன. மற்ற கேள்விகள் எளிதாகவே இருந்தன.

சிறுவினா, மனப்பாடம், இலக்கணம், நெடுவினா ஆகிய பகுதிகளில் காலாண்டு, அரையாண்டு தேர்வுகளில் ஏற்கெனவே கேட்கப்பட்ட கேள்விகளே மீண்டும் இருந்தன. இதனால், சராசரி யாக படிக்கும் மாணவர் கள்கூட தமிழ்ப் பாடத்தில் அதிகமதிப்பெண் பெற வாய்ப்பு உள்ளது’’ என்றனர்.

நேற்றுமுதல் ‘பிளஸ் 1’ அரியர் தேர்வு: மாணவர்களுக்கான அழுத்தத்தை குறைக்கும் நோக்கில், நடப்பு ஆண்டு முதல் பிளஸ் 1 பொதுத் தேர்வு ரத்து செய்யப் பட்டுள்ளது. எனினும், முந்தைய ஆண்டுகளில் பிளஸ் 1 பொதுத் தேர்வில் வெற்றி வாய்ப்பை இழந்த மாணவர்கள், அந்த பாடங்களை அரியர் தேர்வாக எழுத வேண்டும் என்று தேர்வுத் துறை அறிவித்தது. அதன்படி, பிளஸ் 1 அரியர் பொதுத் தேர்வு இன்று (மார்ச் 3) தொடங்குகிறது.



கோவை மாவட்டம் அன்னூர் தெற்கு ஒன்றியத்தில் குன்னத்தூர், கணேசபுரம், பகுதிகளில் 1,000, க்கும் மேற்பட்டோருக்கு வீடு வீடாக சென்று ஹாட் பாக்ஸ், எவர் சில்வர் தட்டு அடங்கிய பரிசு பெட்டகங்களை பொதுமக்களுக்கு அன்னூர் தெற்கு ஒன்றிய செயலாளர் சாய் செந்தில், அவைத் தலைவர் கோபால்,சி.டி.சி.பழனியப்பன், வடவள்ளி ரங்கசாமி, காட்டம் பட்டி செந்தில், முருகன்,ஐ.டி.விங் நவீன் உள்ளீட்டோர் வழங்கினர்.











## திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில்

# மாசித்திருவிழா தேரோட்டம் கோலாகலம்

திருச்செந்தூரில், மாசித் திருவிழாவின் சிகர நிகழ்வான தேரோட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நான்கு ரத வீதிகளிலும் திரண்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் மாசித் திருவிழா, கடந்த பிப்ரவரி 21-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழாவின் ஒவ்வொரு நாளும் காலை மற்றும் மாலை வேளைகளில் சுவாமி மற்றும் அம்பாள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி, எட்டு வீதிகளிலும் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான 10-ம் திருநாள் தேரோட்டம் இன்று (மார்ச் 2, 2026) கோலாகலமாக நடைபெற்றது. இதனை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தரிசனம் மற்றும் உதய மார்த்தாண்ட அபிஷேகம் உள்ளிட்ட சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. தேரோட்ட நிகழ்வில் முதலில் விநாயகர் தேர் ரத வீதிகளில் உலா வந்து நிலையை அடைந்தது.

அதனைத் தொடர்ந்து, காலை 7.50 மணியளவில் சுவாமி தேர் நிலையிலிருந்து புறப்பட்டது. அரோகரா கோஷம் விண்ணதிர, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தேரை வடம் பிடித்து இழுத்தனர். 11-ம் திருநாளான நாளை இரவு தெப்பத் திருவிழாவும், 12-ம் திருநாளான மார்ச் 4-ஆம் தேதி மஞ்சள் நீராட்டு மற்றும் மலர் கேடய சப்பர வீதியுலாவுடன் இந்த ஆண்டுக்கான மாசித் திருவிழா நிறைவு பெறுகிறது.



பரமன்குறிச்சி-திருச்செந்தூர் செல்லும் சாலையில் ராமசாமிபுரம் ஆர்ச் அருகில் திருச்செந்தூர் மாசி திருவிழாவை முன்னிட்டு நடை பயணமாக வருகை தந்த பக்தர்கள் பொதுமக்களுக்கு சிறப்பாக அன்னதானம் வழங்கப்பட்டது. தேரோட்டத்தை முன்னிட்டு வருகை தந்த பக்தர்களுக்கும் பொது மக்களுக்கும் சுண்டல், சுக்கு காபி, குழந்தைகளுக்கு பசும்பால் கொடுக்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பரமன்குறிச்சி அய்யனார் நகர் பந்தல் முருகன், வியாபாரிகள் மற்றும் பாரதமாதா நண்பர்கள் அன்னதான குழுவினர். பூச்சிகாடு பொன். சிவராகவன்,எஸ்.எம்.எஸ். சிவனேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.







Owned, Printer and Published by **G.SASIREKA** from No: 64/80, Vivehananda Colony, Vadapalani, Chennai - 26, Printing at Annai Abirami Achagam, No: 24, Venguchetty Street, Poonga Nagar, Chennai - 3. Editor: **V.S.N.SHARMA.**